சுருக்கம்

பணியமைப்பு – மதுரை மாநகராட்சி – மயான உதவியாளர்கள் – காலியாக உள்ள துப்புரவுப்பணியாளர் பணியிடங்களில் காலமுறை ஊதிய விகிதத்தில் பணியிலமர்த்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந.4) துறை

அரசாணை (2ப) எண்.198 நாள் 24.10.2007

படிக்க

1. ஆணையாளர், மதுரை மாநகராட்சி கடித எண். எச்2/3141/07 நாள் 3.10.2007.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 நேர்முக கடித எண்.170350/2007/மாந.அ4 நாள் 11.10.2007.

---

ஆணை:

நடந்து முடிந்த வரவு–செலவு குறித்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இத்துறைக்கான மானியக் கோரிக்கைமீது அறிவிப்புகள் (2007–08) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் வெளியிட்டபோது, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வரும் மயானங்களில், மயானப் பணிபுரியும் வெட்டியான் என்றழைப்படும் பணியாளர்கள் இனிமேல் மயான உதவியாளர்கள் என்று அழைக்கப்படுவார்கள் என்றும், இப்பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு, முறையான காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வரப்படுவார்கள் என்றும் அறிவிப்பு செய்தார்கள்.

2. இவ்வறிப்பிற்கிணங்க, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மதுரை மாநகராட்சிப் பகுதியிலுள்ள மயானங்களில் பணிபுரியும் உரிமம் பெற்ற வெட்டியான்களை முறையான ஊதிய விகிதத்தில் பணியிலமர்த்த மதுரை மாநகராட்சி ஆணையாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக கீழ்க்கண்டவாறு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்:

மதுரை மாநகராட்சியிலுள்ள மயானங்களில் உரிமம் பெற்ற மயான வெட்டியான்களின் கல்வி மற்றும் வயது தொடர்பான விபரங்கள் பெறப்பட்டன. 72 வார்டுகளை உள்ளடக்கிய மதுரை மாநகராட்சியின் ஜனத்தொகை சுமார் 11 இலட்சமாகும். இப்பகுதியிலுள்ள 32 மயானங்களில் பதிவு பெற்ற 21 மயானங்களுக்குள் வரும் சடலங்களுக்கு சடங்கினை செய்து எரிக்கவோ, புதைக்கவோ செய்யும் காரியங்களை 1.தத்தனேரி, 2.மூலக்கரை, 3.புதூர், 4.பொன்மேனி ஆகிய நான்கு மயானங்களில் பணியாற்றிவந்த 62 நபர்களின் மனுவினை ஆய்வுசெய்ததில், உரிமம் பெற்ற தகுதியான நபர்கள் 40 பேர்கள் என கண்டறியப்பட்டது. தற்சமயம் மாநகராட்சியில் காலியாக உள்ள 700 துப்புரவு பணியாளர் பணியிடங்களில், 40 பணியிடங்களை கொண்டு மயான உதவியாளர் என்ற புதிய பணியிடத்தினை ரூ.2550–55–2660–60–3200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் உருவாக்கி, அதில் மேற்படி 40 நபர்களை நியமிக்கலாம். இது குறித்து மதுரை மாநகராட்சி மாமன்றம் தீர்மானம் (எண்.167 நாள் 26.9.2007) நிறைவேற்றியுள்ளது.

3. நியமனம் செய்யப்படும் மயான வெட்டியான்களின் நலன் மற்றும் பணி விதிகள் வரையறை தொடர்பாக துணை ஆணையாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், மதுரை மாநகராட்சியில் தேர்வு செய்யப்பட்ட 40 பணியாளர்களுக்கு மயான உதவியாளர் பணியிடம் வழங்கி உரிய ஆணையினை அளிக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையாளர் அரசை கேட்டுள்ளார். மதுரை மாநகராட்சிப் பகுதியில் உள்ள நான்கு மயானங்களில் உரிமம் பெற்று பணியாற்றும் வெட்டியான் பணியாளர்களில் 40 உரிமம் பெற்ற பணியாளர்களை மயான உதவியாளர் பணியிடங்களில் ரூ.2550–55–2660–60–3200 எனும் ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யக்கோரும் மதுரை மாநகராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரைத்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:

(அ) நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, மதுரை மாநகராட்சியில் தற்சமயம் காலியாக உள்ள 700 துப்புரவு பணியாளர் பணியிடங்களில் 40 பணியிடங்களை கொண்டு மயான உதவியாளர் என்ற புதிய பணியிடத்தினை ரூ.2550–55–2660–60–3200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் உருவாக்க நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதிக்கப்படுகிறார்;

(ஆ) மதுரை மாநகராட்சிப் பகுதியில் உள்ள நான்கு மயானங்களில் உரிமம் பெற்று பணியாற்றும் வெட்டியான் பணியாளர்களில் 40 (நாற்பது) உரிமம் பெற்ற பணியாளர்களை முறையான ஊதிய விகிதத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ள மயான உதவியாளர் பணியிடங்களில் பணியிலமர்த்த மதுரை மாநகராட்சி ஆணையாளருக்கு அனுமதி வழங்கப்படுகிறது; மற்றும்

(இ) மயான உதவியாளர் பணியிடத்தினை தமிழ்நாடு மாநகராட்சி அடிப்படை பணி விதிகள்,1996–ல் சேர்க்க உரிய விதித்திருத்தம் கோரி செயற்குறிப்பினை அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

// ஆளுநரின் ஆணைப்படி //

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
ஆணையாளர், மதுரை மாநகராட்சி, மதுரை.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை,
குறளகம், சென்னை–108.
நகல்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(அரு.2/நப.3) துறை,
சென்னை–9.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.